# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.10.2023 முதல் 11.10.2023)

**அறிக்கைஎண் 080/2023** **தேதி.06.10.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 8°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 03.10.23முதல் 05.10.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°C ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 13-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (03.10.2023 முதல் 05.10.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 11.10.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03/10 | 04/10 | 05/10 | தேதி | நாள்-1 07/10 | நாள்-2 08/10 | நாள்-3 09/10 | நாள்-4 10/10 | நாள்-5 11/10 |
| 0.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 15 | 60 | 55 | 15 |
| 33 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 33 | 33 | 33 |
| 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 22 | 22 | 22 |
| 4 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 6 | 8 | 8 | 7 |
| 75 | 67 | 67 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 78 | 78 | 82 | 82 | 82 |
| 63 | 64 | 56 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 58 | 58 | 58 |
| 14 | 17 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 14 | 14 | 12 | 12 |
| 230 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 200 | 200 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (07.10.2023 முதல் 11.10.2023)

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 58 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **07-10-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 |
| **08-10-2023** | 10.0 | 9.0 | 11.0 | 6.0 | 7.0 | 12.0 | 7.0 | 9.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 3.4 | 2.0 |
| **09-10-2023** | 48.0 | 47.0 | 54.0 | 35.0 | 41.0 | 57.0 | 39.0 | 50.0 | 8.4 | 0.3 | 8.8 | 0.0 | 9.4 | 2.5 |
| **10-10-2023** | 45.0 | 43.0 | 49.0 | 34.0 | 37.0 | 52.0 | 36.0 | 46.0 | 1.5 | 1.7 | 0.8 | 0.3 | 15.6 | 8.8 |
| **11-10-2023** | 21.0 | 19.0 | 15.0 | 24.0 | 18.0 | 13.0 | 20.0 | 17.0 | 8.6 | 3.6 | 12.2 | 0.0 | 3.8 | 7.5 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 9 முதல் 11ம் தேதி வரையிலும் மேற்கு மண்டல பகுதிகளில் மிதமானது முதல் கன மழையுடன் மணிக்கு 12 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மேற்குத்தொடாடச்சி மலையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானது முதல் கனமழைபெய்ய வாய்ப்புள்ளது.<br>போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கவும்.<br>மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்து விதைப்பினை தொடங்கலாம்.<br>மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் நீர் மற்றும் பயிர் சத்துக்கள் உறிஞ்சுவது குறைவாக காணப்படும். ஆதலால் தழைச் சத்து உரங்களை வேப்பபுண்ணாக்கு அல்லது தார் கலந்து இடவேண்டும். இதனால் சத்துக்கள் உபயோகிப்புத்திறன் அதிகமாக இருக்கும்.<br>பயிர்களில் உரமிடல் மற்றும் மருந்து தெளித்தல் வேலைகளை ஒத்தி வைக்கவும். |
| நெல் | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா நெல் நடவுசெய்த இடங்களில் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். |
| சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தும் வகையில் |

| | | |
|---|---|---|
| | | சிறுகுறு தானியங்களை மானவாரியில் முன்பருவ விதைப்பு செய்யவாம். |

| | | |
|---|---|---|
| நிலக்கடலை | விதைப்பு | மழையை பயன்படுத்தி நிலக்கடலையில் நாற்று பாடுவாசி செய்யவும். மழை இல்லாத பட்சத்தில் குறைந்த அளவு நீர் பாய்ச்சவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 12 - 14 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.<br>மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2கி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.<br>வடிகால் வசதி ஏற்படுத்திய பிறகு மஞ்சளுக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சானக்கொல்லியை இடுவதன் மூலம் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். |
| மஞ்சள் | கிழங்கு பருக்கும் பருவம் | நிலவும் வானிலையில் மஞ்சளுக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சானக்கொல்லியை இடுவதன் மூலம் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம். |
| மரவள்ளி | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் மரவள்ளி கிழங்கு நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். கரணைகளை நடவு செய்வதற்கு முன்பு 1 கிராம் கார்பன்டசிம் மருந்தினை1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் ஊரவைக்கவும். |
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடுவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவவும்.<br>மழையால் முளைத்த புதிய புல்களை சாப்பிடுவதால் குடற்புழு நீக்குவதற்கு மருந்து கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- வரும் 9 முதல் 11ம் தேதி வரை மேற்கு மண்டல பகுதிகளில் மிதமானது முதல் கன மழைக்கு வாய்ப்புள்ளது. போதிய வடிகால் வசதி செய்து அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கவும்.

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை